Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 400 / 2024

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| Name: | பூபதி | Calling: | ரயில்வே ஸ்டேசன் மேனேஜர் (ஓய்வு) |
|---|---|---|---|
| Father's Name: | அருணாச்சலம் | Religion: | |
| Village: | செட்டியப்பனூர் | Age: | 62 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 07.02.2025

எதிரி ஆஜர்

ம.சா.1 குறுக்கு விசாரணை

எதிரியை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 7, 8 வருடமாக தெரியும், எனக்கு உறவினரும் அல்ல, நண்பரும் அல்ல. பின் எதன் அடிப்படையில் எதிரியை தெரியும் என்றால் எனது மைத்துனரும் எல்ஐசி முகவருமான தர்மலிங்கம் என்பவர் மூலம் எதிரியை எனக்கு தெரியும். தர்மலிங்கத்திற்கு எதிரியை எத்தனை வருடமாக தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் நடத்தி வரும் சீட்டில் தர்மலிங்கம் மூலம் எதிரி சிறிய சிறிய சீட்டில் உறுப்பினராக சேர்ந்து அதன் மூலம் எதிரி எனக்கு பழக்கமானார். மேற்படி விவரத்தை நான் வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ கூறியுள்ளேனா என்றால் இல்லை.

எதிரி என்னிடம் நான் நடத்தி வரும் சீட்டில் 2லட்சம், 5லட்சத்திற்கான சீட்டில் உறுப்பினராக இருந்தார், கட்டி முடித்து விட்டார். அந்த சீட்டு எந்த வருடத்தில் கட்டி முடிக்கப்பட்டது என்றால் 2014லிருந்து 2018க்குள் கட்டி முடிக்கப்பட்டது. நான் என்ன படித்துள்ளேன் என்றால்

M.Sc.படித்துள்ளேன். 2லட்சம், 2014லிருந்து 2018 கால கட்டத்தில் நான் மத்திய அரசு ஊழியராக இருந்தேனா என்றால் இருந்தேன். மத்திய அரசு ஊழியராக இருந்ததால் சீட்டு நடத்துவதற்கு முறையாக அனுமதி பெற்றிருந்தேனா என்றால் இல்லை. சீட்டு நடத்துவதற்கு முறையாக அனுமதி வாங்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சீட்டு நடத்துவதற்கு மத்திய அரசிடமோ, மாநில அரசிடமோ உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. சீட்டு நடத்துவதற்கு உரிமம் வாங்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

நான் ரயில்வே துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். பணியிலிருந்தபோதும், ஓய்வு பெற்றபின்பும் நான் நடத்தி வந்த சீட்டில் 200, 300 நபர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். சீட்டு கட்டுபவர்களிடம் எவ்வளவு தள்ளு போனது என்றும், சீட்டு தொகை எவ்வளவு கட்ட வேண்டும் என்றும், என்னிடம் எவ்வளவு இருப்பு தொகை உள்ளது என்றும் ஒரு கார்டில் எழுதி கொடுப்பேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் அவ்வாறு எதிரிக்கு நான் எழுதி கொடுத்த கார்டுகளின் நகல் தான் என்றால் சரிதான். **எதிரி என்னிடம் கட்டி வந்த 2லட்சம், 5லட்சம் சீட்டுகளுக்கு நான் எழுதி கொடுத்த கார்டுகளின் நகல் எ.ம.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2லட்சம் மற்றும் 5லட்சத்திற்கான சீட்டுகளை எதிரி எப்போது எடுத்தார், எப்போது கட்டி முடித்தார் என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் பார்த்துதான் சொல்ல முடியும். மேற்படி சீட்டுகள் சம்மந்தமாக சீட்டு எடுப்பவர்கள் மற்றும் சீட்டு கட்டியவர்கள் எவ்வளவு தொகை எடுத்தார்கள், கட்டினார்கள் என நான் தனியாக ஒரு பேரேட்டில் பதிவு செய்து அதில் சீட்டு எடுப்பவர்களிடம் கையொப்பமும், பணம் கொடுத்ததற்கு சாட்சி கையொப்பமும் பெறுவேன் என்றால் சரியல்ல, பேரேட்டில் பதிவு செய்வேன், சீட்டு எடுப்பவர்களிடம் மட்டும் தான் பணம் பெற்றதற்காக கையொப்பம் வாங்குவேன். அந்த பேரேட்டை நீதிமன்றத்தில் காண்பித்து சாட்சியம் அளிக்க நான் தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன்.

(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியை அந்த பேரேட்டுடம் குறுக்கு விசாரணை செய்ய ஒத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சி கையொப்பம்
(ஓம்.) பூபதி

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) D.Ravi,
Judicial Magistrate (FAC), Vaniyambadi.